**செப்டம்பர் – 22**

# TNPSC துளிகள்

- இந்திய வேளாண் ஆராய்ச்சி சபை - மத்திய கடல் மீன்வள ஆராய்ச்சி நிலையத்தின் (ICAR-CMFRI) அறிவியலாளர்கள் அரபிக்கடலில் இருந்து புதிய விலாங்கு மீன் இனத்தை (eel species) அடையாளம் கண்டுள்ளனர்.
    - இந்த புதிய மீன் இனத்திற்கு CMFRI-இன் நினைவாக அரியோசோமா சிம்ஃப்ரியென்சி (Ariosoma cmfriense) என்று பெயரிடப்பட்டது.
- மத்தியப் பிரதேசத்தில் உள்ள குனோ தேசியப் பூங்காவில், தென்னாப்பிரிக்க சிறுத்தையான ஜெமினியின் மகளான, இந்தியாவில் பிறந்த KGP12 சிறுத்தை நான்கு குட்டிகளை ஈன்றதை அடுத்து இந்தியாவின் சிறுத்தைகளின் எண்ணிக்கை 56 ஆக உயர்ந்துள்ளது.
- தேசிய பட்டியலிடப்பட்ட சாதியினர் ஆணையத்தின் (NCSC) தலைவர் கிஷோர் மக்வானா, 2026 ஆம் ஆண்டிற்கான டாக்டர் ஏ.பி.ஜே அப்துல் கலாம் மக்கள் சேவை விருதினைப் பெற்றுள்ளார்.
- எகிப்தின் இரண்டாவது எல் அலாமைன் (El Alamein) சர்வதேச விமானக் கண்காட்சியில், இந்திய விமானப் படையின் (IAF) சாரங் ஹெலிகாப்டர் வான்சகசக் குழு இந்தியாவைப் பிரதிநிதித்துவப்படுத்தி பங்கேற்றதுடன் இதில் ராணுவம், வணிகம் மற்றும் தனியார் விமானங்கள், பாதுகாப்பு, விண்வெளி மற்றும் மேம்பட்ட விமானத் தொழில்நுட்பங்கள் காட்சிப்படுத்தப்பட்டன.
- சமமான மதிப்புள்ள வேலைக்கு சம ஊதியம் வழங்குவதை ஊக்குவிப்பதற்காக ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் 18 அன்று சர்வதேச சம ஊதிய தினம் கடைபிடிக்கப் படுகிறது.
    - 2026 ஆம் ஆண்டிற்கான கருத்துரு “Equal Pay for Work of Equal Value — For Everyone, Everywhere.” என்பதாகும்.
- செந்நிற பாண்டாக்கள் பாதுகாப்பு மற்றும் வாழ்விட இழப்பு, காடழிப்பு மற்றும் வேட்டையாடுதல் போன்ற அச்சுறுத்தல்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக 2026 ஆம் ஆண்டு செப்டம்பர் 19 அன்று (செப்டம்பர் மாதத்தின் மூன்றாவது சனிக்கிழமை) சர்வதேச செந்நிறப் பாண்டா விழிப்புணர்வு தினம் கடை பிடிக்கப் பட்டது.
    - சர்வதேச இயற்கைப் பாதுகாப்புச் சங்கம் (IUCN) செந்நிறப் பாண்டாவை அருகி வரும் இனமாகப் பட்டியலிட்டுள்ளது.

# தேசியச் செய்திகள்

## இந்தியா - ஜப்பான் உத்திசார் கூட்டாண்மை

- இந்தியா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகள் 'பகிரப்பட்ட எல்லைகளுக்கான இந்தியா-ஜப்பான் ஆண்டு' என்பதன் மூலம் 2027 ஆம் ஆண்டில் தங்களது 75 ஆண்டுகால தூதரக உறவுகளைக் குறிக்கவுள்ளன.
- இந்தியா மற்றும் ஜப்பான் இடையே 1952 ஆம் ஆண்டில் தூதரக உறவுகள் ஏற்படுத்தப் பட்டன.
- 2027 ஆம் ஆண்டு ஏப்ரல் 28 ஆம் தேதியை உள்ளடக்கிய வாரத்தில் இந்தியா-ஜப்பான் வாரம் அனுசரிக்கப்படும். இதில் விழிப்புணர்வு நடவடிக்கைகள், வணிக வட்டமேஜை

மாநாடுகள் மற்றும் இந்தியாவை மையமாகக் கொண்ட கண்காட்சிகள் நடைபெறும்.

- இந்த ஆண்டு விழாவின் தொடக்கமாக 2026 ஆம் ஆண்டு ஐச்சி-நகோயா ஆசிய விளையாட்டுப் போட்டிகளின் போது ஒரு நட்பு ரீதியிலான கிரிக்கெட் போட்டி திட்டமிடப் பட்டுள்ளது.
- SPORT-75 என்பது விளையாட்டுப் பரிமாற்றங்களை உள்ளடக்கியது, அதே சமயம் Cricket Kizuna-75 என்பது இந்தியப் பயிற்சியாளர்கள் ஜப்பானுக்குச் செல்வதை உள்ளடக்கியது.
- IMAGE-75 என்பது மங்கா, அனிம் மற்றும் கேமிங் கூட்டாண்மைகளில் கவனம் செலுத்தும். அதே வேளையில் Shared Future-75 கொள்கை பரிந்துரைகளைக் கையாளும்.
- RASA-75 கலை மற்றும் கலாச்சார நடவடிக்கைகளை உள்ளடக்கும்.
- பாதுகாப்பு, உள்கட்டமைப்பு, தொழில்நுட்பம், வர்த்தகம் மற்றும் கலாச்சாரப் பரிமாற்றம் ஆகியவை இந்தியா-ஜப்பான் ஒத்துழைப்பில் அடங்கும்.




# சர்வதேசச் செய்திகள்

## ஓமன் உத்திசார் துறைமுகம்

- ஹார்முஸ் நீர்ச்சந்தியைச் சுற்றியுள்ள இடையூறுகளுக்கு மத்தியில், வளைகுடா ஒத்துழைப்பு சபை (GCC) நாடுகளுக்கு இந்திய சரக்குகளைக் கொண்டு செல்வதற்கான உத்திசார் மாற்று நுழைவாயிலாக ஓமனில் உள்ள சோஹர் துறைமுகம் உருவெடுத்து உள்ளது.
- இது வளைகுடா ஓமனை நோக்கியபடி, அல் பதினா வடக்கு மாகாணத்தில் உள்ள லிவாவில் அமைந்துள்ள ஒரு ஆழ்கடல் வணிகத் துறைமுகம் மற்றும் தொழில்துறை சிறப்புப் பொருளாதார மண்டலமாகும்.
- இது ஹார்முஸ் நீர்ச்சந்திக்கு வெளியே அமைந்துள்ளது. இது உலகளாவிய கப்பல் பாதைகளுக்கு மாற்று கடல் வழியை வழங்குகிறது.
- இது தளவாடங்கள், பெட்ரோலிய வேதிப்பொருட்கள், உலோகங்கள் மற்றும் உணவு

ஆகிய நான்கு முக்கிய தொழில்துறை குழுமங்களைக் கொண்டுள்ளது.

- இது ஐக்கிய அரபு அமீரகம் (UAE), சவுதி அரேபியா, கத்தார், பஹ்ரைன் மற்றும் குவைத் ஆகிய நாடுகளுக்கு சாலை இணைப்பை வழங்குகிறது என்பதோடு இது வளைகுடா முழுவதும் இந்தியப் பொருட்களின் போக்குவரத்திற்கு ஆதரவளிக்கிறது.




# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## ஸ்டெம் செல் சிகிச்சைக்கான வழிகாட்டுதல்கள்





- ஸ்டெம் செல் சிகிச்சையை ஒழுங்குபடுத்துவதற்காக மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகம் மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களுக்கு ஆலோசனையை வழங்கியுள்ளது.
- குறிப்பிட்ட ரத்தப் புற்றுநோய்கள் மற்றும் ரத்தக் கோளாறுகள் உட்பட அமைச்சகத்தால் அங்கீகரிக்கப்பட்ட நோய்கள் மற்றும் அறிகுறிகளுக்கு மட்டுமே ஸ்டெம் செல் சிகிச்சையை நிலையான கவனிப்பாகப் பயன்படுத்த முடியும்.
- ஆட்டிசம் ஸ்பெக்ட்ரம் கோளாறுக்கான (ASD) ஸ்டெம் செல் சிகிச்சையானது

அங்கீகரிக்கப் பட்ட மருத்துவ பரிசோதனைகளுக்கு மட்டுமே வரம்பிடப்பட்டுள்ளது மற்றும் இதனை நிலையான சிகிச்சையாக சந்தைப்படுத்த முடியாது.

- மருத்துவ பரிசோதனைகள் இந்திய மருத்துவ ஆராய்ச்சி சபை (ICMR) மற்றும் உயிரி தொழில் நுட்பத் துறை வெளியிட்ட ஸ்டெம் செல் ஆராய்ச்சிக்கான தேசிய வழிகாட்டுதல்கள், 2017-ஐப் பின்பற்ற வேண்டும்.
- ஸ்டெம் செல் சிகிச்சையின் அங்கீகரிக்கப்படாத பயன்பாடு, விளம்பரம் அல்லது மேம்படுத்துதல் ஆகியவை மருத்துவ நிறுவனங்கள் (பதிவு மற்றும் ஒழுங்குமுறை) சட்டம், 2010-இன் கீழ் ஒழுங்கு நடவடிக்கை மற்றும் அபராதங்களுக்கு வழிவகுக்கும்.
- ரத்த உற்பத்தியாக்க ஸ்டெம்-செல் மாற்று அறுவை சிகிச்சை (எலும்பு மஜ்ஜை மாற்று அறுவை சிகிச்சை) என்பது லுகேமியா மற்றும் தலசீமியா போன்ற குறிப்பிட்ட ரத்தப் புற்றுநோய்கள் மற்றும் கோளாறுகளுக்கு நிறுவப்பட்ட சிகிச்சையாகும்.

## சுற்றுச்சூழல் செய்திகள்

### பிச்சாவரம் சதுப்புநிலக் காடுகள் மறுசீரமைப்பு




- இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் (NHAI) மற்றும் வனத்துறை இணைந்து கடலூர் மாவட்டம் பிச்சாவரத்தில் ₹1.97 கோடி செலவில் 25 ஹெக்டேர் பரப்பளவில் புதிய சதுப்புநிலக் (மாங்குரோவ்) காடுகளை உருவாக்கியுள்ளன.
- சதுப்புநிலக் காடுகள் என்பவை உப்பைத் தாங்கக்கூடிய கடலோரத் தாவரங்கள் ஆகும். இவை கடற்கரைகளை அரிப்பு, புயல்கள் மற்றும் பேரலைகளிலிருந்து பாதுகாப்பதுடன், மீன்கள் மற்றும் பிற கடல்வாழ் உயிரினங்களுக்குப் பாதுகாப்பான வாழ்விடங்களையும் வழங்குகின்றன, மேலும் கார்பனைச் சேமிக்கவும் உதவுகின்றன.
- வனத்துறை நாற்றங்காலில் 75,000-க்கும் மேற்பட்ட ரைசோஃபோரா அபிகுலாட்டா (Rhizophora apiculata) மரக்கன்றுகள் வளர்க்கப்பட்டு திருத்தப்பட்ட மீன்-எலும்பு முறையில் நடப் பட்டன.
- கிழக்கு கடற்கரை சாலை மற்றும் தேசிய நெடுஞ்சாலை (NH)-332A விரிவாக்கத்தின் போது ஏற்படும் சதுப்புநில இழப்பை ஈடுகட்ட இந்த மர வளர்ப்பு திட்டமிடப்பட்டது; மரக்காணம் முகத்துவாரத்தில் ஏற்பட்ட உண்மையான சேதம் 0.15 ஹெக்டேர் மற்றும் 100-க்கும் மேற்பட்ட மரங்கள் மட்டுமே என்ற அளவிற்கு குறைக்கப்பட்டது.

- செங்கல்பட்டு மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் பொருத்தமான நிலம் கிடைக்காததை அடுத்து, பிச்சாவரம் சதுப்புநிலப் பகுதியில் வண்டல்முனை, எம்.ஜி.ஆர் திட்டு மற்றும் கொட்டுமுனை ஆகிய மூன்று இடங்கள் தேர்ந்தெடுக்கப் பட்டன.

### சாங்தாங் வனவிலங்கு சரணாலயம் வரைபடமாக்கல்

- லடாக்கில் உள்ள சாங்தாங் குளிர் பாலைவன வனவிலங்கு சரணாலயத்திற்குள் உள்ள ராணுவ நிலைகளின் இடஞ்சார்ந்த வரைபடமாக்கல் மற்றும் கள சரிபார்ப்பை அதிகாரிகள் மேற்கொள்வார்கள்.
- இந்தக் கணக்கெடுப்பில் புவிசார் நிலைப்படுத்தல் அமைப்பு (GPS), புவியியல் தகவல் அமைப்பு (GIS), புவி-குறிப்பு முறை (geo-referencing) மற்றும் செயற்கைக்கோள் படங்கள் ஆகியவை பயன்படுத்தப்படும்.
- வனவிலங்கு அதிகாரிகள் முக்கியமான வாழ்விடங்கள் மற்றும் வனவிலங்கு நடமாட்ட தாழ்வாரங்களை அறிவியல் பூர்வமாக வரைபடமாக்குவார்கள்.
- இந்த பயிற்சி காவல்துறை மற்றும் பாதுகாப்பு நிறுவனத்துடன் இணைந்து மேற் கொள்ளப் படும்.
- சட்டபூர்வ உரிமைகள் நிர்ணய செயல்முறை மீண்டும் தொடங்கும், ஆனால் பொருந்தக் கூடிய இறுதி தேதிகளுக்குப் பிறகு புதிய ஆக்கிரமிப்பு அல்லது அங்கீகரிக்கப் படாத கட்டுமானத்தை இது அனுமதிக்காது.





## அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

### நிதி ஆயோக்கின் திறன் மேம்பாட்டு அறிக்கை

- நிதி ஆயோக் 2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் 'விக்சித் பாரத்@2047-க்கான திறன் மேம்பாட்டை மறுவடிவமைத்தல்' என்ற அறிக்கையை வெளியிட்டது. இது திறன் பயிற்சி மற்றும் வேலைவாய்ப்புக்கு இடையிலான இடைவெளிகளை எடுத்துக் காட்டுகிறது.
- சுமார் 3% பெண்கள் மட்டுமே முறையான வேலைகளில் உள்ளனர். அதேசமயம் சுமார் 71% பேர் முறைசாரா வேலைகளில் அல்லது வேலைவாய்ப்பு, கல்வி அல்லது பயிற்சியில் இல்லாதவர்கள் (NEET) பிரிவில் உள்ளனர் என்பதை இந்த அறிக்கை குறிப்பிடுகிறது.

- பராமரிப்பு, பாதுகாப்பு கவலைகள், பாதுகாப்பான போக்குவரத்து இல்லாமை, வரையறுக்கப் பட்ட திட்டம் மற்றும் நிதி மற்றும் பயிற்சிக்கான வரையறுக்கப்பட்ட அணுகல் ஆகியவை பெண்களுக்கான முக்கிய தடைகளில் அடங்கும்.
- 2014-15 ஆம் ஆண்டு முதல் பல்வேறு திறன் மேம்பாட்டுத் திட்டங்களின் கீழ் 7.67 கோடிக்கும் அதிகமானோருக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.
- டிஜிட்டல் வாழ்நாள் கற்றல் கணக்குகள், திறன் பாஸ்போர்ட்டுகள், திறன்களுக்கு முன்னுரிமை அளிக்கும் வேலைவாய்ப்பு மற்றும் தேசிய கடன் கட்டமைப்பின் (NCrF) அதிக பயன்பாடு ஆகியவற்றை இந்த அறிக்கை முன்மொழிகிறது.
- பெண்களின் மறுதிறனுக்கான 'பள்ளிக்கு திரும்புதல்' மற்றும் பொது-தனியார் கூட்டாண்மைகள் மூலம் பாதுகாப்பான விடுதிகள் மற்றும் போக்குவரத்திற்கான 'சுரக்சித் சாத்தி' ஆகியவற்றையும் இது பரிந்துரைக்கிறது.




## WMO நிலத்தடி நீர் அறிக்கை




- உலக வானிலை அமைப்பு (WMO) அதன் உலகளாவிய நீர் வளங்களின் நிலை 2025 அறிக்கையில் இந்தியாவில் தொடர்ச்சியான நிலத்தடி நீர் வீழ்ச்சியைப் பதிவு செய்துள்ளது.
- 2022-2025 ஆம் ஆண்டு காலகட்டத்தில் இந்தியாவின் சில பகுதிகளில் தொடர்ச்சியான நிலத்தடி நீர்ப் பற்றாக்குறை காணப்பட்டதுடன் அதிகப்படியான நீர் பிரித்தெடுத்தல் ஒரு முக்கிய காரணமாக அடையாளம் காணப்பட்டுள்ளது.
- பாதிக்கப்பட்ட பகுதிகளில், நிலத்தடி நீர் மறுநிரப்பப்படுவதை விட அதிகமாக

உறிஞ்சப் படுவதையே இந்த வீழ்ச்சி சுட்டிக்காட்டுகிறது.

- உலகளவில், 34% நிலத்தடி நீர் கண்காணிப்பு நிலையங்கள் 2025 ஆம் ஆண்டில் இயல்பை விடக் குறைவான அளவிலிருந்து மிகக் குறைவான நிலைகளை பதிவு செய்துள்ளன. இது 2024 ஆம் ஆண்டில் 25% ஆக இருந்தது.
- நிலத்தடி நீர் மட்டங்கள் 2001-2020 ஆம் ஆண்டு குறிப்பு காலத்துடன் ஒப்பிடப்பட்டன.
- 2025 ஆம் ஆண்டில் வட இந்தியாவும் இயல்பை விடக் குறைவான நிலப்பரப்பு நீர் சேமிப்பைப் பதிவு செய்துள்ளது.

### ஐ.நா. பாலினச் சமத்துவ அறிக்கை

- ஐ.நா. பெண்கள் அமைப்பு மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் பொருளாதார மற்றும் சமூக விவகாரங்கள் துறை (UN DESA) ஆகியவை இணைந்து 2026 ஆம் ஆண்டிற்கான பாலினக் கண்ணோட்ட அறிக்கையை (Gender Snapshot 2026) வெளியிட்டன.
- பாலினச் சமத்துவத்திற்கான மூன்றில் ஒரு நிறுவன வழிமுறைகள் கடந்த இரண்டு ஆண்டுகளில் அவற்றின் நிறுவன அதிகாரத்தைக் குறைத்துள்ளன.
- இத்தகைய நிறுவனங்களில் நான்கில் ஒரு பங்கு நிறுவனங்கள் நிதி ஒதுக்கீடு குறைப்பை எதிர்கொண்டன; அதேவேளையில், ஏறக்குறைய பத்தில் ஒரு பங்கு நிறுவனங்கள் தங்கள் நிதி மீதான கட்டுப்பாட்டை இழந்தன.
- ஏழு நாடுகளில் ஆறு நாடுகள் ஆண்களால் வழிநடத்தப்படுகின்றன. அதே நேரத்தில் பெண்கள் உலகளவில் 6% தலைமை நிர்வாக அதிகாரி (CEO) பதவிகளை மட்டுமே கொண்டுள்ளனர்.
- பத்தில் கிட்டத்தட்ட ஒன்பது பாதுகாப்பு அமைச்சர்கள் மற்றும் பத்தில் எட்டுக்கும் மேற்பட்ட நிதி அமைச்சர்கள் ஆண்கள் ஆவர்.
- நிலையான வளர்ச்சி இலக்கு 5 (SDG 5) குறிகாட்டிகள் எதுவும் தற்போது 2030 ஆம் ஆண்டிற்குள் அடைவதற்கான பாதையில் இல்லை என்று அறிக்கை கூறுகிறது.




## மாநிலச் செய்திகள்

### துளு மொழி அங்கீகாரம்

- தட்சிண கன்னடா மற்றும் உடுப்பி மாவட்டங்களுக்கான இரண்டாவது கூடுதல் நிர்வாக மொழியாக துளு மொழியைப் பயன்படுத்த கர்நாடக அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- துளு என்பது முக்கியமாக கடலோர கர்நாடகப் பகுதியில் பேசப்படும் ஒரு திராவிட மொழியாகும்.

- இந்த முடிவு, இரண்டு மாவட்டங்களில் அதிகாரப்பூர்வ பணிகள், மொழிபெயர்ப்பு மற்றும் பணியாளர் பயிற்சிகளில் துளு மொழியைப் பயன்படுத்த அனுமதிக்கும்.
- துளு மொழி தொடர்பான மொழிபெயர்ப்பு மற்றும் பயிற்சிக்காக அரசாங்கம் ஆண்டு தோறும் ₹82 லட்சத்தை ஒதுக்கியுள்ளது.
- இந்த முடிவு தட்சிண கன்னடா மற்றும் உடுப்பிக்கு மட்டுமே பொருந்தும், முழு கர்நாடக மாநிலத்திற்கும் அல்ல.

## Tulu as the Second Additional Administrative Language

The Cabinet has approved Tulu as the **second additional administrative language of Karnataka**, alongside Kannada, for official government purposes in Udupi and Dakshina Kannada districts

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★